ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாதா$_2$ர்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா$_3$ந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸதா$_3$ ஹ்ருதி$_3$ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ ஒருகுறளாய் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஒருகுறளாய் ॥

## காழிச்சீராம விண்ணகரம்

‡ஒரு குறளாய் இரு நிலம் மூவடி மண் வேண்டி⋆
உலகனைத்தும் ஈர் அடியால் ஒடுக்கி⋆ ஒன்றும்
தருகவெனா மாவலியைச் சிறையில் வைத்த⋆
தாடாளன் தாள் அணைவீர்⋆ தக்க கீர்த்தி
அரு மறையின் திரள் நான்கும் வேள்வி ஐந்தும்⋆
அங்கங்கள் அவை ஆறும் இசைகள் ஏழும்⋆
தெருவில் மலி விழா வளமும் சிறக்கும்⋆ காழிச்
சீராம விண்ணகரே சேர்மினீரே (1)

நான்முகன் நாள் மிகைத் தருக்கை இருக்கு வாய்மை⋆
நலமிகு சீர் உரோமசனால் நவிற்று⋆ நக்கன்
ஊன் முகமார் தலையோட்டூண் ஒழித்த எந்தை⋆
ஒளி மலர்ச் சேவடி அணைவீர்⋆ உழு சேயோடச்
சூல் முகமார் வளை அளைவாய் உகுத்த முத்தை⋆
தொல் குருகு சினை என்னச் சூழ்ந்தியங்க⋆ எங்கும்
தேன் முகமார் கமல வயல் சேல் பாய்⋆ காழிச்
சீராம விண்ணகரே சேர்மினீரே (2)

வையணைந்த நுதிக் கோட்டு வராகம் ஒன்றாய்⋆
மண் எல்லாம் இடந்தெடுத்து மதங்கள் செய்து⋆
நெய் அணைந்த திகிரியினால் வாணந் திண் தோள்⋆
நேர்ந்தவன் தாள் அணைகிற்பீர்⋆ நெய்தலோடு
மை அணைந்த குவளைகள் தம் கண்கள் என்றும்⋆
மலர்க் குமுதம் வாய் என்றும் கடைசிமார்கள்⋆
செய் அணைந்து களை களையா தேறும்⋆ காழிச்
சீராம விண்ணகரே சேர்மினீரே (3)

www.prapatti.com

பஞ்சியல் மெல்லடிப் பின்னை திறத்து⋆ முன்னாள்
பாய் விடைகள் ஏழ் அடர்த்து பொன்னன் பைம் பூண்⋆
நெஞ்சிடந்து குருதியுக உகிர் வேல் ஆண்ட⋆
நின்மலன் தாள் அணைகிற்பீர்⋆ நீலமாலைத்
தஞ்சுடைய இருள் தழைப்பத் தரளம் ஆங்கே⋆
தண் மதியின் நிலாக் காட்டப் பவளம் தன்னால்⋆
செஞ்சுடர் வெயில் விரிக்கும் அழகார்⋆ காழிச்
சீராம விண்ணகரே சேர்மினீரே (4)

தெவ்வாய மற மன்னர் குருதி கொண்டு⋆
திருக் குலத்தில் இறந்தோர்க்குத் திருத்தி செய்து⋆
வெவ்வாய மா கீண்டு வேழம் அட்ட⋆
விண்ணவர் கோன் தாள் அணைவீர்⋆ விகிர்த மாதர்
அவ்வாய வாள் நெடுங்கண் குவளை காட்ட⋆
அரவிந்தம் முகம் காட்ட அருகே ஆம்பல்⋆
செவ்வாயின் திரள் காட்டும் வயல் சூழ்⋆ காழிச்
சீராம விண்ணகரே சேர்மினீரே (5)

பைங்கண் விறல் செம்முகத்து வாலி மாளப்⋆
படர்வனத்துக் கவந்தனொடும் படையார் திண்கை⋆
வெங்கண் விறல் விராதன் உக வில் குனித்த⋆
விண்ணவர் கோன் தாள் அணைவீர்⋆ வெற்புப் போலும்
துங்கமுக மாளிகை மேல் ஆயம் கூறும்⋆
துடி இடையார் முகக் கமலச் சோதி தன்னால்⋆
திங்கள் முகம் பனி படைக்கும் அழகார்⋆ காழிச்
சீராம விண்ணகரே சேர்மினீரே (6)

பொருவில் வலம்புரி அரக்கன் முடிகள் பத்தும்⋆
புற்று மறிந்தன போலப் புவிமேல் சிந்த⋆
செருவில் வலம்புரி சிலைக் கை மலைத் தோள் வேந்தன்⋆
திருவடி சேர்ந்துய்கிற்பீர்⋆ திரை நீர்த் தெள்கி
மருவி வலம்புரி கைதைக் கழியூடாடி⋆
வயல் நண்ணி மழை தரு நீர் தவழ் கால் மன்னி⋆

www.prapatti.com

தெருவில் வலம்புரி தரளம் ஈனும்⋆ காழிச்
சீராம விண்ணகரே சேர்மினீரே (7)

பட்டரவேர் அகல் அல்குல் பவளச் செவ்வாய்⋆
பணை நெடுந் தோள் பிணை நெடுங்கண் பாலாம் இன்சொல்⋆
மட்டவிழும் குழலிக்கா வானோர் காவில்⋆
மரம் கொணர்ந்தான் அடி அணைவீர்⋆ அணில்கள் தாவ
நெட்டிலைய கருங்கமுகின் செங்காய் வீழ⋆
நீள் பலவின் தாழ் சினையில் நெருங்கு⋆ பீனத்
தெட்ட பழம் சிதைந்து மதுச்சொரியும்⋆ காழிச்
சீராம விண்ணகரே சேர்மினீரே (8)

பிறைதங்கு சடையானை வலத்தே வைத்துப்⋆
பிரமனைத் தன் உந்தியிலே தோற்றுவித்து⋆
கறைதங்கு வேல் தடங்கண் திருவை மார்பில்
கலந்தவன் தாள் அணைகிற்பீர்⋆ கழுநீர் கூடித்
துறைதங்கு கமலத்துத் துயின்று⋆ கைதைத்
தோடாரும் பொதி சோற்றுச் சுண்ணம் நண்ணி⋆
சிறைவண்டு களி பாடும் வயல் சூழ்⋆ காழிச்
சீராம விண்ணகரே சேர்மினீரே (9)

‡செங்கமலத்தயன் அனைய மறையோர்⋆ காழிச்
சீராம விண்ணகர் என் செங்கண் மாலை⋆
அங்கமலத் தட வயல் சூழ் ஆலி நாடன்⋆
அருள் மாரி அரட்டமுக்கி அடையார் சீயம்⋆
கொங்குமலர்க் குழலியர் வேள் மங்கை வேந்தன்⋆
கொற்ற வேற் பரகாலன் கலியன் சொன்ன⋆
சங்கமுகத் தமிழ் மாலை பத்தும் வல்லார்⋆
தடங்கடல் சூழ் உலகுக்குத் தலைவர் தாமே (10)

॥ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ॥

www.prapatti.com